04.03.2026



**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.253/2011</u>**

**<u>பி.வா.சா. 1–பெரியண்ணன் த/பெ.பெருமாள்</u>**

**<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி தங்கராசு என்னுடைய அப்பாவுடன் பிறந்த அண்ணன் மகன் ஆவார். தங்கராசுவின் தகப்பனார் பெயர் கருப்பண்ணன் என்னுடைய அப்பா பெயர் பெருமாள். கருப்பண்ணனும் என்னுடைய அப்பா பெருமாளும் தான் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். சர்வே எண்.293/3C நிலத்தில் கிணறு உள்ளது என்றால் சரிதான். இந்த சர்வே எண்ணில் உள்ள கிணறை என் தகப்பனாருக்கும் என்னுடைய பெரியப்பா கருப்பண்ணன் வகையறாவுக்கும் ஆதி காலத்தில் இருந்து கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் இல்லை. அந்த கிணறு எங்களுக்கு மட்டும் தனியாக பாத்தியப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.தற்பொழுது சர்வே எண்.293/3 C யில் எனக்கு பாதி பாகம் என்னுடைய பெரியப்பாவிற்கு பாதி பாகம் உள்ளது என்றால் சரிதான். போடி போயன் தாசு போயன் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட நிலம் மானாவரி நிலம் என்று சொன்னால் சரிதான். இந்த போடி போயன் தாசு

போயன் நிலங்களில் நாங்கள் பாதி நிலத்தையும் வாதி குடும்பத்தார் பாதி நிலத்தையும் கிரையம் வாங்கியுள்ளார். வாதிகள் குடும்பத்தில் யார் கிரையம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. போடி போயன் என்பவரிடம் இருந்து நான் நிலம் எதுவும் வாங்கவில்லை என சாட்சி கூறுகிறார். கற்றறிந்த வாதி வழக்கறிஞர் 27.09.82 ம் தேதி ஆவணம் எண்.2357/82 ஆம் ஆண்டு பதிவு பெற்ற கிரைய ஆவணம் மூலம் போடி போயன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. கிரையம் வாங்கினேன். ஆனால் அந்த கிரைய ஆவணத்தில் உள்ள சொத்தை நான் போடி போயனுக்கு எழுதி வைத்திருந்தேன் அந்த சொத்தை தான் நான் மீண்டும் கிரையம் பெற்றேன். 10 ஆண்டுகளுக்கு முன்பு சொத்தை போடி போயனுக்கு எழுதி வைத்தினேன். 3 ஆண்டுகளுக்கு மீட்டுவிட்டேன் நான் பொய்யாக சாடசிம் அளிக்கிறேன் 1981 ஆம் ஆண்டி போடி போயனுக்கு சொத்தை கொடுத்துவிட்டு 1982 ஆண்டு கிரையம் வாங்கிவிட்டேன் என்றால் நினைவு இல்லை. போடி போயனிடம் இருந்து நான் கிரயம் வாங்கி நிலத்திற்கும் தாசு போயனிடம் இருந்து வாதி கிரையம் வாங்கிய நிலத்திற்கும் சர்வே எண்.283/3C நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து ஏற்கனவே பாசன வசதி இருந்ததா என்றால் இல்லை. நானும் எங்கள் வகையறாவும் வாதி வகையறாவும்

தாசு போயனிடம் இருந்து மானாவரி நிலம் வாங்கி பாகம் பிரித்துக்கொண்டு போயன் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்ற கிணற்றில் இருந்து தண்ணீர் பாய்த்துக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். தாசு போயனிடம் இருந்து வாதிகள் கிரையம் பெற்ற நிலத்தில் மேட்டு நிலமும் பள்ளமான நிலமும் உள்ளது என்றால் சரிதான். நான் எங்கள் நிலத்திற்கு பொது கிணற்றில் இருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மோட்டாரில் எனக்கு பாதி பங்கு உண்டு. என் பெயரில் தற்போது தனியாக மோட்டார் உள்ளது. வாதியின் மோட்டாரில் எனக்கு பாதி பங்கு உண்டு என பதிவு பெற்ற ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். அந்த ஆவணத்தை வழக்கு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே ஒரு மோட்டார் சர்வீஸ் பொது கிணற்றில் இருந்தது அந்த சர்வீசை நானும் பயன்படுத்தினேன். எனது பெரியப்பாவிற்கு பாத்தியப்பட்டது அடிப்படையில் நான் பயன்படுத்தினேன். அவ்வாறு தாவா கிணற்றில் ஏற்கனவே இருந்த மோட்டார் சர்வீசில் எங்களுக்கு பாதி வாதிக்கு பாதி உரிமை உள்ளது. என்னுடைய பெரியப்பா என் பெயரில் தனியாக மற்றொரு மின் மோட்டார் இணைப்பு பெற ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார். என் பெயரில் புதியதாக மின் மோட்டார் இணைப்பு பெற என்னுடைய பெரியப்பா ஒப்புதல்

04.03.2026



அளிக்கும் போது புதியதாக பெறும் மின் இணைப்பு மோட்டாரை நான் பயன்படுத்திக்கொள்ளுமாறும் பொதுவாக உள்ள மின் மோட்டாரை வாதிகள் மட்டும் பயன்படுத்திக்கொள்ளுமாறு கூறிதான் ஒப்புதல் அளித்தார் என்றால் சரியல்ல. ஏற்கனவே பொது கிணற்றில் உள்ள சர்வீஸ் எண்.14 புதிய சர்வீஸ் எண்.101 ஆகும். பழைய சர்வீஸ் எண். 14 ல் எனக்கு பாதி உரிமை உண்டு. சர்வீஸ் எண்.101 ல் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் என்னுடைய கட்சி ஆகும். இவ்வாறு பழைய சர்வீஸ் எண்.14 ல் பாதி உரிமை உள்ளது என்றும் புதிய சர்வீஸ் எண்.101 ல் எனக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்று எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வாதிகள் தாசு போயனிடமிருந்து கிரையம் பெற்ற நிலத்தில் பொது கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ள எனக்கு ஆட்சேபனை உண்டு. என்ன வகையான ஆட்சேபனை என்றால் அந்த கிணறு ஆதியில் 30 அடி ஆழம் மட்டும் இருந்தது அதன் பிறகு 80 அடி ஆழம் நான் தான் வெட்டினேன். அவ்வாறு 80 அடி ஆழம் வெட்டுவதற்கு வாதிகள் பணம் தரவில்லை பணம் தந்ததால் பாகம் கொடு என எனது பெரியப்பா என்னிடம் கூறியுள்ளார். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் இவ்வாறு எனது பெரியப்பா பணம் கொடுக்கவில்லை என்றால் பாகம் கொடுக்காதே என

04.03.2026



குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 4 முறை தாவா கிணற்றை 85 அடி ஆழம் வரை ஆழப்படுத்தினேன். கடைசியாக ஆழப்படுத்தி 10 அல்லது 15 ஆண்டுகள் இருக்கும். முதன்முறை ஆழப்படுத்திய ஆண்டு எனக்கு நினைவு இல்லை. ஒவ்வொரு முறை ஆழப்படுத்தும்போது வாதிகள் பணம் தருவார்கள் என நம்பி வாதிகள் தாவா கிணற்றை பயன்படுத்திக்கொள்ள அனுமதித்தேன். என்னுடைய பெரியப்பா வாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும் காலத்திலேயே தன்னுடைய பிள்ளைகளான வாதிகளுக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் தண்ணீர் கொடுக்காதே என்று என்னிடம் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். வாதிகள் மீது பணம் கோரி சட்டப்படியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. ஊர் முக்கியஸ்தர் முன்னாடி நடிவடிக்கை எடுத்தேன். ஊர் முக்கியஸ்தர் முன்னிலையில் வாதிகள் 3 மாதத்தில் பணம் தருவதாக ஒப்புக்கொண்டார்கள் ஆனால் பணம் தரவில்லை. இது சம்பந்தமாக வாதிகளிடம் சட்ட அறிவிப்பு நான் அனுப்பவில்லை. நான் தான் தாவா 80 அடி கிணற்றை வெட்டியதற்கு ஆதாராம் உள்ளதா என்றால் எழுத்து பூர்வமான ஆவணம் அந்த கிணறு வெட்டியவருக்கு தான் தெரியும். 3 முறை கிணறு வெட்டும் கேசாபோத்தி என்பவர் மூலம் வெட்டினோம் ஒரு முறை எங்கள் ஆட்கள் வெட்டிக்கொண்டார்கள். கிணற்றில்

இருந்து எங்கள் நிலத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல பூமிக்கு அடியில் குழாய் உள்ளது. நிலம் ஏற்ற தாழ்வாக இருப்பதாக வாதிகள் கூறியதால் என்னுடைய 5 செண்டு நிலத்தை வாதிகளுக்கு எழுதி கொடுத்தேன். அப்போதும் கிணறு வெட்டும் பணத்தை பற்றி நான் கேட்கவில்லை. தாவா கிணற்றை உண்மையிலேயே நான் செலவு செய்திருந்தால் அந்த பணத்தை வாதியிடமிருந்து வாங்கியிருப்பேன். தாவா கிணற்றை வாதியும் நானும் சேர்ந்து தான் செலவு செய்தோம் அதனால் தான் பணம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 5 செண்டு நிலம் பள்ளம் என்று சொன்னால் தெற்கு நிலத்திலிருந்து அது பள்ளம். பள்ளவயலுக்கும் மேட்டு வயலுக்கும் கரை இல்லை வரப்பு மட்டும் தான் உள்ளது அந்த வரப்பு வழியாக தான் நிலத்துக்காரர் நடப்பார்கள் என்றால் சரிதான். வாதிகள் கிழமேல் வரப்பு வழியாக செல்வதை நான் இடையூறு செய்துள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் அவ்வாறு நான் இடையூறு செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதிகள் கிழமேல் வரப்பை பயன்படுத்துவதை நான் தொந்தரவு செய்வதை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 5 செண்டு நிலத்திற்கு தென்மேற்கு மூலை பழனி மூலை. கிணற்றிலிருந்து என்னுடைய நிலத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல அங்காங்கே சிறு சிறு தொட்டிகள் கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 5

04.03.2026



செண்டு நிலத்தில் தென்மேற்கு பழனி மூலையில் வாதி கட்டியுள்ள தொட்டியில் தண்ணீர் விழுந்து அதில் இருந்து தான் மேற்கு திசையில் என்னுடைய நிலத்திற்கு தண்ணீர் செல்கிறது என்றால் சரியல்ல. அவ்வாறு அங்கு தொட்டி இல்லை. ஆணையர் வந்து பார்க்கும்போது அங்கு தொட்டி இல்லை.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.